முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

<u>அசல் வழக்கு எண். 1/2018</u>

<u>டிடபிள்யு - 2. பொன்னுச்சாமி</u>

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 - ஆம் நாள் ஆகிய இன்று பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய DW2 ஆவது நபரின் வாக்குமூலம் (1969 .ம் ஆண்டு 54 .வது விதியின் 9=வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. T. சோமு, முதுநிலை கட்டளை நிறைவேற்றுநர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

பெயர் = பொன்னுச்சாமி வயது =

தகப்பனார் பெயர் = சமயம் =

கிராமம் = தொழில் =

தாலுக்கா = ஜாதி =

<u>01.04.2019</u>

<u>சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.</u>

நான் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் அதனைப் படித்துப் பார்த்துத்தான் கையொப்பமிட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும்.

<u>குறுக்கு விசாரணை</u>

சின்னச்சாமிக்கும் எனக்கு பங்காளி உறவு முறை ஆகும். சின்னச்சாமியும் ரெங்கசாமியும் எவ்வளவு காலமாக பிரச்சினை என்றால் சமார் 2 வருட காலம் ஆகும். நானும் ரெங்கசாமியும் கூட 2 வருட காலமாக பேசிக்கொள்வதில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே இடம் சம்பந்தமாக தகராறு என்றால் சரிதான். தாவா இடத்தில் வாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் அது காலியிடமாகும் 20 வருடங்களாக சின்னச்சாமி தான் ஆட்டுக்குட்டி அடைத்து வருகிறார். சின்னச்சாமி 20 வருடங்களாக அனுபவித்து வருவதாக சொல்வதற்கு ஆவணம் எதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் இல்லை என்றும் வாதி தான் ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகை போட்டு தாவா சொத்தில் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறார்

என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை தொடர்பாக எனது நிரூபண வாக்குமூலத்தில் யார் தகவல் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.